Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C. 297/2022** |
| Sessions | .. | .. | } | |
| | | | } | Prosecution – **PW**2 |
| Deposition of witness for | | | } | Defence – |
| | | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | தவஸ்குமார் |
| Father Name | : | கர்ணன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **22.10.2024.**

<u>(எதிரி ஆஜர்.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் பொட்டகவயல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநர் வேலை செய்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன கர்ணன் என்னுடைய அப்பா. சாட்சி பஞ்சவர்ணம் என்னுடைய அம்மா. ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 17.07.2021 அன்று மாலை சுமார் 05.00 மணிக்கு என் அப்பா வெளியில் போய்விட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு போனார். இரவு 08.00 ஆகியும் அவர் வீட்டிற்குவரவில்லை. அதனால் இரவு சுமார் 08.20 மணிக்கு நானும், என் அம்மாவும் என் அப்பாவை தேடிக்கொண்டு எங்கள் ஊர் மாரியம்மன் கோவில் அருகில் சொன்றோம். என் அப்பா கோவில் வாசலில் படுத்துக்கொண்டிருந்தார். எதிரி இங்கயாடா படுத்துக்கிடக்கிற சாவுடா என்று சொல்லி கோவிலுக்கு பொங்கல் வைக்கிற முண்டுக்கல்லை தூக்கி என் அப்பாவின் தலையில் போட்டார். நானும், எனது அம்மாவும் டேய்டேய் என்று

சொல்வதற்குள் மூன்றுமுறை முண்டுக்கல்லை தூக்கி என் அப்பாவின் தலையில் எதிரி போட்டுவிட்டு ஓடிவிட்டார். என் அப்பாவிற்கு அருகில் படுத்துகிடந்த சிங்காரவேலு, வேதராஜ் இருவரும் சத்தம்கேட்டு எழுந்து பார்ப்பதற்குள் எதிரி என் அப்பா மீது கல்லைத்தூக்கிப்போட்டு தாக்கிவிட்டு ஓடிவிட்டார். என் அப்பாவை பொட்டகவயல் ஜமாத்திற்கு பாத்தியப்பட்ட ஆம்புலன்ஸில் இராமநாதபுரம் GH–ற்கு கொண்டு போய் சேர்த்தோம். இரவு சுமார் 10.00 மணிக்கு கொண்டு போய் சேர்த்தோம். இரவு 10.30 மணிக்கு என் அப்பா இறந்துவிட்டதாக டாக்டர் சொன்னார். என் மாமாவும், அம்மாவும் தேவிப்பட்டினம் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்கப்போனார்கள். என் அப்பா இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னால் எங்கள் ஊர் மாரியம்மன் கோவில் பக்கத்தில் வைத்து எங்கள் வயலில் இருந்த கருவேலமரத்தை யாரோ வெட்டிவிட்டார்கள் என்று என் தாத்தா ஆறுமுகத்திடம் என் அப்பா சொல்லிக்கொண்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரி அவருடைய வீட்டிலிருந்து வந்து நீ என்னைத்தான்டா என்று சொல்லி அருவாளால் என் அப்பாவை வெட்ட வந்தார். அங்கிருந்த என் தாத்தா எதிரியை சத்தம்போட்டு விலக்கி விட்டுவிட்டு அந்த விவரத்தை என் அம்மாவிடம் வந்து சொன்னார். இந்த சம்பவத்தின்போது ஒரு வாரத்தில் உன்னை சாகடிக்கிறேன்டா எதிரி என் அப்பாவை பார்த்து சொல்லிவிட்டுப் போனார். என் அப்பா மீது எதிரி தூக்கிப்போட்ட முண்டுக்கல்தான் தற்போது நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படுகிறது. (சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள முண்டுக்கல்லை பார்த்து சாட்சி சாட்சியம் சொன்னார்.) ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

என் அப்பாவை காணவில்லை என்று நானும், என் அம்மாவும் வீட்டிலிருந்து இரவு சுமார் 08.20 மணிக்கு கிளம்பினோம். எங்கள் வீட்டிலிருந்து மாரியம்மன் கோவில் சுமார் 30 மீட்டர் தூரத்தில் இருக்கிறது. எங்கள் வீட்டிலிருந்து பார்த்தால் மாரியம்மன் கோவிலில் நடக்கும் சம்பவங்கள் தெரியும் என்று சொன்னால் சரிதான். எங்கள் வீட்டிலிருந்து பார்த்தால் மாரியம்மன் கோவிலில் யார்யார் தூங்குகிறார்கள் என்று பார்க்கலாம் என்று சொன்னால் சரிதான். எங்கள் வீட்டுக்கு பின்பக்கத்தில் தேடிவிட்டு, கோவிலுக்கு தேடப்போனோம். கோவிலைச் சுற்றி நான்குபுறமும் சிமிண்டால் ஆன பிளாட்பாரம் அமைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

கோவிலின் நான்குபக்கமும் ஆஸ்பெஸ்டாஸ் கூரை போடப்பட்டு தாழ்வாரம் அமைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மாரியம்மன்கோவில் தலைவாசல் வடக்கு பார்த்து இருக்கிறது. கோவிலின் தலைவாசலுக்கு மேற்குப்பகுதியில் என் அப்பா படுத்திருந்தார். வேதராசும், சிங்காரவேலும் கோவிலுக்கு கிழக்குப்பக்கத்தில் படுத்திருந்தார்கள். என் அப்பா படுத்திருந்த இடத்திலிருந்து சுமார் 3 அடி தூரத்தில் அவர்கள் படுத்திருந்தார்கள். நானும், என் அம்மாவும் என் அப்பாவின் அலறல் சத்தம்கேட்டு போனோம் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பாவும், சிங்காரவேலும், வேதராசும் சம்பவ இடத்தில் பேசிக்கொண்டிருக்கவில்லை தூங்கிக் கொண்டிருந்தார்கள். கோவிலில் அப்போது மின்சார விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இந்த சம்பவம் நடப்பதற்கு சுமார் 2 நிமிடத்திற்கு முன்னால் நாங்கள் அங்கு போனோம். சம்பவம் பற்றி தெரிந்த உடன் கிராம தலைவர் அங்கு வந்தார். எதிரி கல்லைத் தூக்கிப்போடும்போது நாங்கள் சம்பவ இடத்திற்கு போனோம். சம்பவம் பற்றி போலிசார் என்னைக்கேட்டார்கள். மருத்துவமனையில் என் அப்பாவை சேர்த்த உடன் தகவல் தெரிந்து போலிசார் அங்கு வந்துவிட்டனர். சம்பவம் நடந்த உடனேயே கிராமத்தலைவர் மற்றும் கிராமப் பெரியவர்கள் ஆகியோர்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்து காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னார்கள். அவர்கள் தகவல் சொன்னதன்பேரில் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். SI, உள்ளிட்ட 4 போலிஸ்காரர்கள் வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். அந்த இடத்தில் என்னையும், என் தாயாரையும் போலிசார் விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை, மருத்துவமனைக்கு வந்துதான் விசாரித்தனர். மறுநாள்தான் போலிசார் என்னை விசாரித்தனர். சம்பவம் நடந்த அன்று இரவு சுமார் 10.00 அல்லது 10.30 மணிக்கு போலிசார் மருத்துவமனைக்கு வந்து என்னையும், என் தாயாரையும் விசாரித்தனர். நானும், என் தாயாரும் சொன்ன விவரங்களை போலிசார் எழுதிக்கொண்டார்கள். அதில் நான் கையெழுத்து போடவில்லை. என் அம்மாவும் கையெழுத்து போடவில்லை. மருத்துவமனையிலிருந்து என் அம்மாவும், மாமா திருநாவுக்கரசும் இரவு சுமார் 01.00 மணிக்கு காவல் நிலையத்திற்கு புறப்பட்டு சென்றார்கள். நான் அவர்களுடன் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. இந்த வழக்கில் என் மாமாவும், என் அம்மாவும் சென்று புகார் கொடுத்தார்கள். 18.07.2021 அன்று அதிகாலை புகார் கொடுக்கப்பட்டது. எதிரி மூன்றுமுறை கல்லைத் தூக்கிப்போடும்போது நான் பார்த்தேன். நாங்கள் சம்பவ

இடத்திற்கு போவதற்கு முன்பே எதிரி என் அப்பாவின் தலையில் கல்லைத் தூக்கிப்போட்டுவிட்டு ஓடிவிட்டார் என்று போலிசார் விசாரித்தபோது நான் சொல்லவில்லை. என் அப்பாவின் தலையில் போடப்பட்டதாக சொல்லப்படும் கல் பொங்கல் வைத்து புகைபடிந்த கல் என்று சொன்னால் லேசாக புகைபடிந்தகல். அந்த கல்லின் மூலையில் இரத்தம் இருந்தது. சம்பவம் நடந்த இடத்திற்கு தகவல் தெரிந்து உடனடியாக வந்த போலிசார் அங்கிருந்த கல்லையும், என் அப்பா அணிந்திருந்த ஆடைகளையும் எடுத்துச் சென்றுவிட்டார்கள் என்று சொன்னால் சரிதான். ஆம்புலன்ஸில் சென்றபோது போலிசார் எங்களுடன் வரவில்லை. நாங்கள் மருத்துவமனைக்கு சென்ற பிறகு சுமார் 10 நிமிடம் கழித்து போலிசார் மருத்துவமனைக்கு வந்தனர். இந்த வழக்குச் சம்பவம் நடந்ததாக கூறப்படும் தினத்தன்று இரவு 08.30 மணிக்கு நான் எதிரியை தாக்கி காயம் ஏற்படுத்தியதாக இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் எதிரி சிகிச்சைக்கு போனார் என்று சொன்னால் நான் அவரை அடிக்கவில்லை. நான் எதிரியை தாக்கியதாக போன் மூலம் காவல் நிலையத்திற்கு கொடுத்த தகவலின்பேரில் போலிசார் எங்கள் கிராமத்திற்கு வந்தார்கள் என்றும், அப்போது போலிசாரிடமிருந்து தப்பிச் செல்வதற்காக நானும், என் தகப்பனாரும் இருசக்கர வாகனத்தில் தப்பித்துச் செல்ல முயற்சித்தபோது குடிபோதையில் இருந்த என் தகப்பனார் கீழே தவறி விழுந்ததில் தலையில் ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரி என் மீது புகார் கொடுத்துவிடுவார் என்பதற்காக தற்செயலாக ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரி மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்குச் சம்பவம் நடந்ததாக கூறப்படும் தினத்தன்று என் தகப்பனார் அளவுக்கு அதிகமாக மது குடித்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பாவிற்கு மதுகுடிக்கும் பழக்கம் இல்லை. மருத்துவமனையில் சேர்த்தபோது என் அப்பா பேசுகிறநிலையில் இல்லை. மருத்துவரிடம் விவரங்களை என் அம்மாவும், மாமாவும் சொன்னார்கள். தகவல் தெரிந்து என் மாமா மருத்துவமனைக்கு வந்தபோது இரவு சுமார் 10.40 மணியிருக்கும். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**